# திருவருகைக்காலம் இரண்டாம் ஞாயிறு

*திருவழிப்பாட்டு ஆண்டு* C (06-12-2015)

## இன்றைய நற்செய்தி வாசகங்கள்

**பாரூக்கு 5: 1~9**

**பிலிப்பியர் 1: 4~6, 8~11**

**லூக்கா 3:1~6**

## திருப்பலி முன்னுரை- 1

இயேசு பாலகனின் பிறப்பைக் தூய்மையான உள்ளத்தோடு கொண்டாட, அவரை இதயத்தில் வரவேற்க இவ்வாலயம் வந்துள்ள உங்கள் அனைவரையும் அன்புடன் வாழ்த்தி வரவேற்கின்றோம். இன்று திருவருகைக்காலம் இரண்டாம் ஞாயிறு தினத் திருப்பலியைக் கொண்டாடுகின்றோம்.

இயேசு கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே இன்றைய நற்செய்தியின் வழியாகவும்,திருமுழுக்கு யோவான் வழியாகவும் இறைவன் நமக்கு விடுக்கின்ற அழைப்பு என்னவென்றால் "மனமாற்றம்". நாம் அனைவரும் நம்முடைய பழைய பாவ இயல்பை விட்டுவிட்டு இயேசு பாலகனை நமது இதயத்தில் தாங்க வேண்டும். அதற்கான வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

# திருவருகைக்காலம் இரண்டாம் ஞாயிறு

*திருவழிப்பாட்டு ஆண்டு* C *(06-12-2015)*

## இன்றைய நற்செய்தி வாசகங்கள்

**பாரூக்கு 5: 1~9**

**பிலிப்பியர் 1: 4~6, 8~11**

**லூக்கா 3:1~6**

## திருப்பலி முன்னுரை - 2

இயேசு பாலகனின் பிறப்பைக் தூய்மையான உள்ளத்தோடு கொண்டாட, அவரை இதயத்தில் வரவேற்க இவ்வாலயம் வந்துள்ள உங்கள் அனைவரையும் அன்புடன் வாழ்த்தி வரவேற்கின்றோம்.

இன்று திருவருகைக்காலம் இரண்டாம் ஞாயிறு தினத் திருப்பலியைக் கொண்டாடுகின்றோம். நம் ஆண்டவரும், மீட்பருமான இயேசுவின் பிறப்பு விழாவை அர்த்தத்தோடு கொண்டாட நம்மை உரிய முறையில் ஆயத்தம் செய்ய, அழைக்கும் காலமாக இக்காலம் அமைகின்றது. கடவுள் வானத்தின்கீழ் உள்ள எல்லா நாடுகளுக்கும் உன் பேரொளியைக் காட்டுவார். நீதியில் ஊன்றிய அமைதி, இறைப்பற்றில் ஒளிரும் மாட்சி என்னும் பெயர்களால் கடவுள் உன்னை என்றென்றும் அழைப்பார், என்னும் இறைவாக்குகள், நம்பிக்கையற்ற நிலையில் இருக்கும் நமக்கு புதிய சக்தியையும் நம்பிக்கையையும் தருவதாக உள்ளது. கடவுள் நம்சார்பாகச் செயலாற்றுவார், நம்மை விடுவிப்பார், நம் துன்பங்களையெல்லாம் அழித்துப் போடுவார் என்பதை இன்றைய இறைவார்த்தைகள் வழியாக நாம் காணக்குகூடியதாக உள்ளது. இறைவனின் இந்த அருட்பெருக்கு ஆசீர்வாதமாகவும், வாக்குறுதியாகவும் நம்மை வந்தடைகின்ற போது, நாமும் பெறுப்புடன் செயலாற்ற வேண்டும் என்னும் உண்மையும் உணர்த்தப்படுகின்றது. அதாவது பாவ மன்னிப்பு அடைய மனம்மாறித் திருமுழுக்குப் பெறுங்கள் என்பதே அவ் அழைப்பாகும். ஆகவே மனம்மாறி உறவுகளைப் புதுப்பித்து புதுவாழ்வு வாழ அருள் கேட்டுச் செபிப்போம்.

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**படைப்பின் முதல்வனே இறைவா!**

இந்த உலகில் பயனம் செய்யும் திருச்சபை,அதன் தலைவர்களும் மக்களின் நலனில் அக்கரைக் கொண்டு, வாழ்விழந்த மக்களுக்கு அன்பின், இரக்கத்தின், மன்னிப்பின், மற்றும் அமைதியின் கருவிகளாகச் செயல்பட, கிறிஸ்துவின் மீட்பைத் தங்கள் நல்ல செயல்கள் மூலம் பிறருக்கு அறிவிக்கும் வரம் தந்திட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**ஆதரித்துக் காக்கும் இறைவா!**

ஆயனில்லா ஆடுகள்போல இன்று தவித்து நிற்கும் மக்களை கருணையுடன் கண்ணோக்கிப் பாரும். அவர்களின் துன்ப துயரங்களைப் போக்கி, அவர்கள் சரியான திசையை நோக்கிப் பயணிக்கவும், என்றும் அமைதியையும், உடல், நலத்தையும், பாதுகாப்பையும் பெற்று வாழவும், உமது அன்பின் சிறகுகளுக்குள் அவர்களை வைத்துக் காத்திடவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**உறவின் ஊற்றே இறைவா!**

இன்றைய நாட்களிலே குடும்பத்தின் புனிதத் தன்மைக்கும், உறவுக்கும், ஒற்றுமைக்கும் எதிராக இருக்கும் எல்லாச் சக்திகளையும் முறியடித்து: குடும்பங்களிலே அன்பும், ஒற்றுமையும், தோழமையும், புரிந்துணர்வும் நிலைபெற்று: குடும்பங்கள் திருக்குடும்பத்தின் தன்மைகளைக் கொண்டு வாழ அருளாசீர் அளித்திடவேண்டுமென்றும்: பிரிந்திருக்கும் குடும்பங்களை ஒன்று சேர்த்திடவேண்டுமென்றும் இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**மாபெரும் விடுதலைச் சக்தியாகிய தந்தையே!**

இன்று நாங்கள் ஊனியல்பின் நாட்டங்களுக்குள் அகப்பட்டும், அரசியல் அடித்தனத்திற்குள் அகப்பட்டும் விடுதலை பெற தவித்துக்கொண்டிருக்கின்றோம். எனவே ஆண்டவரே! தென்னாட்டின் வறண்ட ஓடையை நீரோடையாக வான்மழை மாற்றுவதுபோல, எங்கள் அடிமை நிலையை மாற்றியருள வேண்டுமென்றும், நாங்கள் ஒவ்வொருவரும் வாழ்வுதரும் உமது வார்த்தையின் ஒளியிலே எமது தீய வாழ்க்கைப் போக்குகளிலிருந்து திரும்பி, மனம்மாறி உறவுகளைப் புதுப்பித்து புதுவாழ்வு வாழ அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**அன்பின் இறைவா,**

இறந்து போன அனைத்து ஆன்மாக்களுக்கும் நித்திய இளைப்பாற்றியை அளித்திட வேண்டுமென்றும், எமது நாட்டில் ஏற்பட்ட போரில் இறந்து போன அனைவருக்கும் நித்திய இளைப்பாற்றியை அளித்திட வேண்டுமென்றும், யாரும் நினையாத ஆன்மாக்களுக்காக சிறப்பாக மன்றாடுகிறோம். அவர்கள் தாங்கள் செய்த பாவங்களினால் உத்தரிக்கிற ஸ்தலத்தில் இருந்தாலும் அவர்கள் வேதனை குறைந்து உம் தெய்வீக விருந்தில் பங்குபெற அவர்களை ஆசிர்வதித்து உம்மிடம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**கருணையும் இரக்கமும் நிறைந்த தந்தையே!**

எமது இளம் தலைமுறையினர் நிதானத்தோடும், முழு ஞானத்தோடும் உமது வழிகளைக் கண்டடைந்து, உமக்குரியவர்களாக வாழ அவர்களை நிறை உண்மையை நோக்கி வழி நடாத்தியருள வேண்டுமென்றும், நோயினால் வாடுவோர், தனிமையில் இருப்போர், கவலையினாலும் துன்பங்களினாலும் கலங்குவோர், தேவையில் உழல்வோர், அடிமைத்தனத்துள் வாழ்வோர் அனைவரையும் உமது கருணையினாலும், இரக்கத்தினாலும் நிறைத்து அவர்கள் அனைவருக்கும் ஆறுதலையும், நிம்மதியையும் அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நோயாளரின் ஆரோக்கியமே இறைவா!**

உடல், உள நோயினால் வேதனையுறும் அனைவரையும் நீர் இரக்கத்துடன் கண்நோக்கி: அவர்களின் வேதனையைத் தணித்து, நிறைவான உடல், உள நலத்தை அளித்துக் காத்திட வேண்டுமென்றும், இன்று எமது சமூகத்திலே வீணான விவாதங்களாலும், குழப்பங்களாலும், தவறான போதனைகளாலும், பிடிவாதத்தாலும், உறவை முறித்து, விசுவாசத்தை மறந்து பாதை மாறிச் செல்லும் அனைவர்மீதும் மனமிரங்கி உமது வழியில் செல்ல அவர்களை வழிப்படுத்தியருள வேண்டுமென்றும், எமது இளைஞர்களை நிறைவாக ஆசீர்வதியும். அவர்களது இளமைப் பருவத்தின் பாவங்களையும், குற்றங்களையும் நினையாது உமது இரக்கத்தையும், உமது பேரன்பையும் அவர்கள் மேல் பொழிந்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.